பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 28 திங்கட்கிழமை 13.01.2025 கதிர் 067

## இனி இது ரகசியம் அல்ல!

தேசிய மக்கள் சக்தி ஆட்சி மெல்ல மெல்ல பழைய வழக்குகளைக் கிளறத் தொடங்கியுள்ளது. ஊழல் மோசடி செய்து வெளிநாடுகளில் பதுக்கப்பட்ட பணத்தை மீண்டும் ☞2

# எல்லை தாண்டும் மீன்பிடியால் வடக்கு மீனவர்களுக்கு பாதிப்பு

## கைதுகள் தொடரும் என கடற்படை தளபதி தெரிவிப்பு



இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் படகுகள் தொடர்ந்தும் கைப்பற்றப்படும். இந்த சட்டவிரோத மீன்பிடியால் வடக்கு மீனவர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் காஞ்சன பானகொட தெரிவித்தார்.

அவர் நேற்று அநுராதபுரத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் கடற்பரப்புக்குள் சட்டவிரோதமான மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தும் நிலைமைகள் தொடருகின்றன. இதனால் வடக்கு மீனவர்கள் மிகவும் நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர்.

குறிப்பாக சட்டத்துக்கு அமைவாகச் செயற்படுகின்ற மீனவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் ☞2

## வாகன இறக்குமதி வரி 500%வரை உயரும்

### சங்கம் தெரிவிப்பு

இறக்குமதியின்போது வாகனங்களுக்கு விதிக்கப்படும் எதிர்காலத்தில் 400 சதவீதம் முதல் 500 சதவீதம் வரை வீதத்திற்கு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு வாகனங்களின் விலை உயர்வுக்கு வற் வரி உள்ளிட்ட ஏனைய 3 வகையான வரிகள் உள்ளடக்கப்படுகின்றமையே காரணமாகும் என அந்த சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்தார். அவருடனான உரையாடலில் அவர் தெரிவித்ததாவது: ☞2

## ஓய்வூதிய அதிகரிப்பை மீள நடைமுறைப்படுத்த முடிவு

2020ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆளும்தரப்பால் இரத்துச் செய்யப்பட்ட ஓய்வூதிய சம்பள அதிகரிப்பு நடைமுறையை மீண்டும் அமுல்படுத்த தற்போதைய ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது.

2016 ஜனவரி முதல் நாள் தொடக்கம் 2019 டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்குள் ஓய்வுபெற்ற அரச ☞2

## கைதிகள் வைத்தியசாலையில் சுகபோகமாக இருக்க முடியாது

### யாருக்கும் சலுகை இல்லை என்கிறார் பிரதி அமைச்சர்

சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்படுவார்கள். எவருக்கும் சிறப்பு சலுகை வழங்கப்படமாட்டாது. நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய சிறைச்சாலையில் இருக்க வேண்டியவர்கள் சிறைச்சாலையில் இருக்க வேண்டும்.

அதனை விடுத்து சிறைதண்டனையை அனுபவித்துக் கொண்டு சுகபோகமாக இருக்க முடியாது என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். 'தூய ஸ்ரீலங்கா' செயற்திட்டம் தொடர்பில் மாறுப்பட்ட பல கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஒரு தரப்பினர் தங்களின் அரசியல் இலாபத்துக்காக ☞2

## பொங்கல் தினத்தில் கைதிகளை சந்திப்பதற்குச் சிறப்பு ஏற்பாடுகள்

சிறையில் உள்ள இந்து மதக் கைதிகளுக்கு வெளிநபர்களை சந்திப்பதற்கான விசேட வாய்ப்பை நாளை தைப்பொங்கலன்று வழங்க சிறைச்சாலை திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இந்து மதக் கைதிகளுக்கு இந்த விசேட வாய்ப்பு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம், இந்துக் கைதிகளின் உறவினர்கள் ஒரு கைதிக்கு மட்டும் போதுமான உணவு மற்றும் இனிப்புகளைக் கொண்டு வர அனுமதிக்கப்படுகிறார்கள்.

அதன்படி, நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளிலும் வெளிநபர்களை சந்திப்பதற்கான நடவடிக்கைகள், சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் ☞2

## ராஜபக்சக்கள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கவேண்டியது அநுரவின் பொறுப்பு

### நாமல் ராஜபக்ச சவால்

ராஜபக்சக்கள் மீது தான் சுமத்திய குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுக்கு உண்டு. இப்போது அவரே அதிகாரத்தில் இருக்கிறார் குற்றச்சாட்டுக்களை சட்டத்தின் முன் அவர் நிரூபிக்கவேண்டும் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் நேற்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பணியிடத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2025ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், வரிகளில் திருத்தம் செய்யப்படுகிறது.

காலையில்தான் வரிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. பொருளாதார விவகாரத்தில் ஆளும்தரப்பு எவ்வாறான நிலைப்பாட்டை கொண்டுள்ளது என்பதை அறிய முடியவில்லை.

மதுபான பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் எனக்கொன்றும் பிரச்சினையில்லை, ஏனெனில் நான் மது அருந்துவதில்லை.

மதுபானங்களின் விலை அதிகரிக்கப்பட்டால் சட்டவிரோத மதுபான உற்பத்திகள் அதிகரிக்கும். அது பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

பல்வேறு ☞2

## சிறையிலிருந்து தப்பிய கைதி 15 ஆண்டுகளின் பின் கைது

2010 ஆம் ஆண்டு கொழும்பு மகசின் சிறைச்சாலையில் இருந்து வழக்கு ஒன்றிற்காக கெஸ்பேவ நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது தப்பிச் சென்ற கைதி ஒருவரை, சம்பவம் நடந்து 15 ஆண்டுகளுக்குப் பின்னர் பிலியந்தலை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் பிலியந்தலை, கட்டுகுருந்த பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதானவர் ஆவார்.

முன்னர் இராணுவ காலாட்படை பிரிவில் பணியாற்றிய இவர், கெஸ்பேவவின் மாகந்தன பகுதியில் உள்ள வங்கியில் நடந்த கொள்ளை சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்தநிலையில் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது தப்பிச் சென்றுள்ளார்

பிலியந்தலை, மாம்பே பகுதியில் உள்ள ஒரு வீட்டில் ☞2

## உள்ளாட்சித் தேர்தலுக்கான 80 ஆயிரம் மனுக்கள் நீக்கம்

உள்ளாட்சிமன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்த 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேட்பு மனுக்கள் நீக்கப்படவுள்ளன. அதற்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

2023 மார்ச் மாதம் நடைபெறவிருந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள், கடந்த ஆளும்தரப்பினால் நிதி ஒதுக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில், முன்னைய வேட்பு மனுக்களை நீக்கி, புதிதாக ☞2

## கரும்புகை விடும் வாகனங்கள் இனிமேல் கறுப்புப் பட்டியலில்

கரும்புகை வெளியிடும் வாகனங்களை கறுப்புப் பட்டியலில் இணைக்க ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம், எதிர்வரும் நாட்களில் போக்குவரத்துப் பொலிசார் மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் ஒன்றிணைந்து சோதனை நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

அதன்போது கரும்புகை வெளியிடும் வாகனங்கள் கண்டறியப்பட்டு அதன் சாரதிகளின் அனுமதிப்பத்திரத்தைப் பொலிசாரும், வாகனத்தின் வருமான அனுமதிப் பத்திரத்தை மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளும் பொறுப்பேற்கவுள்ளனர்.

அதன்பின்னர் 14 நாட்களுக்குள்ளாக குறித்த வாகனம் கரும் புகை வெளியிடுவதற்கான காரணம் கண்டறியப்பட்டு, அதனை நிவர்த்தி செய்தாக வேண்டும்.

பின்னர் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரிகள் முன்னிலையில் வாகனம் ஓட்டிக் காண்பிக்கப்பட்டு கரும்புகை வெளியாகவில்லை என்று நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே அந்த வாகனத்தை தொடர்ந்தும் பயன்பாட்டில் வைத்திருக்க ☞2

## இஸ்ரேலிய தொழில் வாய்ப்புகள் 10 ஆயிரம் இல்லாமல் போனது

கடந்த ஆட்சிக் காலத்தில் அரசியல்வாதிகளால் தகுதியற்ற நபர்கள் இஸ்ரேலில் விவசாய தொழிலுக்கு அனுப்பட்டுள்ளதால் குறித்த நபர்கள் அந்தத் தொழில் நிறுவனங்களில் இருந்து தப்பிச்சென்று வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவதன் காரணமாக இஸ்ரேலில் விவசாய துறையில் 10ஆயிரம் தொழில் வாய்ப்பு எமது நாட்டுக்கு இல்லாமல் போயுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலையாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோஷல விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இஸ்ரேலில் விவசாய தொழிலுக்கு எந்த தகுதியும் இல்லாத நபர்களை கடந்த ஆளும்தரப்பின் அரசியல்வாதிகள் அனுப்பியுள்ளனர். அதனால் அவர்கள் தாம் தொழில் புரிந்த இடங்களில் இருந்து தப்பிச்சென்று வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர், இதனால் இஸ்ரேலில் விவசாயதுறையில் 10 ஆயிரம் தொழில் கோட்டா எமது நாட்டுக்கு இல்லாமல் போயுள்ளது.

அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை நம்பி வழங்கி இரண்டு வருடங்களாக 5 ஆயிரம் பேர் வரை வெளிநாட்டு தொழிலுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னர் முறையற்ற வகையில் நபர்களை ஒவ்வொரு இடத்தில் இருந்தும் அழைத்துவந்து வெளிநாட்டு தொழிலுக்கு அனுப்பி இருக்கிறார்கள். ☞2

## இனி இது .....

நாட்டுக்குக் கொண்டு வருவோம் என்பது தற்போதைய ஆட்சியாளர்களின் தேர்தல் கால வாக்குறுதி. அதனை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எவையும் இதுவரையில் எடுக்கப்பட்டதாக இல்லை. இது மக்கள் மத்தியிலும் எதிர்க் கட்சிகள் மத்தியிலும் ஒரு பேசுபொருளாக மாறியதை அடுத்து, மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் சில நகர்வுகளுக்குச் செல்வதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர். அதனடிப்படையில் அவர்களின் முதல் இலக்கு பஸில் ராஜபக்ச எனப்படுகின்றது.

முன்னாள் அமைச்சரா பஷில் ராஜபக்ஷ தொடர்பான விசாரணைகள் தற்போது இரகசியமான முறையில் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. பஸிலுடன் கடந்த காலங்களில் நெருக்கமாகச் செயற்பட்ட வர்த்தகர்கள், முதலாளிகள், முக்கிய அதிகாரிகள் போன்றோர் விசாரணை வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

பஸில் ராஜபக்சவின் சொத்துக்கள், சேமிப்புகள், வீடுகள் உள்ளிட்ட விவரங்களைப் புலனாய்வுப் பிரிவினர் தீவிரமாகத் சேகரிக்கத் தொடங்கியுள்ளனர். பஸில் தற்போது நாட்டில் இல்லை. அவர் அமெரிக்காவல் இருக்கிறார். தேர்தல் காலத்தில் கட்சியை மீளக்கட்டியெழுப்புவதற்காக என்று அவர் இலங்கை வந்திருந்தார். கட்சியைக் கட்டமைப்பதில் வல்லவர் அவர் என்றும் மீண்டும் பொது ஜன பெரமுனவைக் கட்டியெழுப்பி விடுவார் என்றும் கதையளக்கப்பட்ட நிலையில் அது எதுவும் சாத்தியமாகாமல் அந்தக் கட்சி படுதோல்வியடைந்தது. அதனால் தேர்தல் முடிந்ததுமே அவர் அமெரிக்காவுக்குப் பறந்துவிட்டார்.

நடந்துவரும் விசாரணைகளின் அடிப்படையில் அவரைக் கைதுசெய்வதற்கான தேவை ஏற்பட்டால் அமெரிக்காவில் உள்ள அவருக்கு எதிராக சர்வதேச பிடியாணை பெறக்கூடிய வகையில் அதிகாரிகள் காய் நகர்த்துகிறார்கள் என்று தெரியவருகின்றது. மிக விரைவில் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுப்பதற்கான ஆவணங்கள் ஏற்கனவே சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் சட்டமா அதிபருடனான சந்திப்பின்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பஸிலுக்கு எதிரான இந்த வழக்குத் தொடர்பிலும் முக்கியமாகக் கேட்டறிந்து கொண்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## எல்லை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவரங்கள் தொடர்பான தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன. நாம் அதன் பிரகாரம் செயற்படுகின்றோம். நாட்டின் கடற்பரப்பிற்குள் சட்டவிரோமாக மீன்பிடியில் ஈடுபட்ட படகுகளை கைப்பற்றியுள்ளோம். கடந்த வாரமும் இவ்வாறான படகுகளைப் பிடித்தோம்.

கடற்பிரப்பிற்குள் அத்துமீறி சட்டவிரேதமான மீன்பிடியில் ஈடுபடும் படகுகளை நாம் தொடர்ந்தும் கைப்பற்றி சட்டத்தின் முன் நிறுத்துவோம். நாட்டின் சட்டவாட்சியை உறுதிப்படுத்தும் வகையில் கடற்படையினர் தொடர்ச்சியாக செயற்படுவார்கள் என்றார்.

## ஓய்வூதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களுக்காகவும் குறித்த ஓய்வூதிய சம்பள அதிகரிப்பு பெற்றுக்-கொடுக்கப்படும் என தொழில் பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

## சிறையிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேக நபர் மறைந்திருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இரண்டு நாட்களுக்கு முன்பு நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் இவர் கைது செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## உள்ளாட்சித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பு மனுக்களைக் கோரும் வகையில் தற்போது உள்ளாட்சிமன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்றது.

இதனால் நாடெங்கிலும் உள்ள 320 உள்ளூராட்சி மன்றங்களின் 8711 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக புதிதாக வேட்புமனுக்கள் கோரப்படவுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள்ளாக தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன் ஒருகட்டமாக கடந்த ஆண்டில் உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல்களில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட 80 ஆயிரத்து 670 வேட்பு மனுக்கள் தற்போது இரத்துச் செய்யப்படவுள்ளன.

## கைதிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் திட்டத்துக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கிறார்கள். நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் அனைவரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கமைய இந்தச் செயற்திட்டம் நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படுகிறது. எதிர்க்கட்சியினர் அரசியல் காரணிகளுக்கு முன்னுரிமை வழங்காமல் நாடு என்ற ரீதியில் புதிய பரிமாணத்தை நோக்கி பயணிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நாடாளுமன்றத்தை சிரமதானம் செய்துக் கொடுக்குமாறு நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்தோம். மக்களும் நாடாளுமன்றத்தை தூய்மைப்படுத்தி எமக்கு பெரும்பான்மை பலத்தை வழங்கியுள்ளார்கள். ஆகவே மக்கள் வழங்கியுள்ள ஆணைக்கமைவாகவே செயற்படுவோம்.

அரசமைப்பின் 12(1) பிரிவின் பிரகாரம் சட்டத்தின் முன்னிலையில் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் நீதிமன்றத்துக்கு நடந்து செல்லும் அரசியல்வாதி நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவார். நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய சிறைச்சாலையில் இருக்க வேண்டியவர்கள் சிறையில் இருக்க வேண்டும் அதனை விடுத்து வைத்தியசாலைகளில் சுகபோகமாக இருக்க முடியாது.

சிறை தண்டனை விதிக்கப்பட்ட நபர் அரசியல் அனுசரணையுடன் வைத்தியசாலையில் இருப்பதாக கடந்த காலங்களில் குறிப்பிடப்பட்டது. சட்டத்தின் முன் அனைத்து பிரஜைகளும் சமமாக மதிக்கப்படுவார்கள்.

எவருக்கும் சிறப்பு சலுகைகள் வழங்கப்பட மாட்டாது. ஒரு சில கைதிகள் பல மாதகாலமாக வைத்தியசாலையில் இருப்பது தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் - என்றார்.

## ராஜபக்சக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணிகளைக் குறிப்பிட்டுக் கொண்டு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை விட்டு விலகிச் சென்றவர்கள் இன்று அரசியலில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். விலகிச் சென்றவர்களை மீண்டும் இணைத்துக் கொள்வதில் அவதானம் செலுத்தியுள்ளோம். உள்ளக மட்டத்தில் பேச்சு நடத்துகின்றோம்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டணி அமைப்பது குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம். கட்சி என்ற ரீதியில் பலமடைவதற்கான அனைத்துத் திட்டங்களையும் செயற்படுத்தியுள்ளோம்.

ஆளும்தரப்பின் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாகச் சிதைவடைந்துள்ளது. ஆகவே எதிர்வரும் காலங்களில் நடைபெறும் தேர்தல்கள் ஆளும்தரப்புக்கு எதிரானதாக அமையும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் ராஜபக்சக் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். தற்போது அவர் தான் ஜனாதிபதி ஆகவே எம் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக சட்டத்தின் முன் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டு.

நான் சட்டக்கல்லூரி பரீட்சைக்கு தோற்றிய விதம் தொடர்பில் அமைச்சர் வசந்த சமரசிங்க நாடாளுமன்றத்தில் பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்தார். குற்றச்சாட்டை நிரூபித்தால் நான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதாக குறிப்பிட்டேன். இதுவரை அந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை - என்றார்.

## பொங்கல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலை விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்படும் என சிறைச்சாலை ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி பி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேலிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியத்துக்கும் அழுத்தங்களைக் கொடுத்து அரசியல்வாதிகள் தங்களுக்குத் தேவையானவர்களை இவ்வாறு அனுப்பி இருக்கிறார்கள். இவ்வாறு செயற்பட்டால் நாடு என்ற வகையில் நாங்கள் எப்படித் தொழில் சந்தையை பாதுகாத்துக்கொள்ள முடியும்? அதனால் இது தொடர்பில் நாங்கள் முறையான நடவடிக்கை எடுப்போம்.

கடந்த காலத்தில் இஸ்ரேலுக்கு தொழிலாளர்களை அனுப்ப 10ஆயிரம் வரையான கோட்டா கிடைத்தது. அதில் 2ஆயிரம் பேர் இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டிருந்தனர். என்றாலும் எந்தவித ஒழுங்குமுறையும் இல்லாமல், தகுதியற்ற தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு அனுப்பியதால், அவர்கள் தங்களின் தொழிலை மேற்கொள்ளாமல் சேவை நிலையங்களில் இருந்து வெளியேறி பல்வேறு இடங்களில் தொழில் செய்யும் பின்னணி ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக விவசாய தாஜழில் கோட்டாவை நிறுத்துவதற்கு இஸ்ரேல் அரசு நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த தொழில் வாய்ப்பை எவ்வாறு மீண்டும் பெற்றுக்கொள்வது என நாங்கள் தீவிரமாக கலந்துரையாடி இருந்தோம். தொழிலுக்குத் தகுதியான, அதற்குஏற்புடைய உடல்தகுதியுள்ள தொழிலாளர்களை அனுப்புவதாக இருந்தால் மீண்டும் அந்த தொழில் கோட்டாவை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க முடியும் என அவர்கள் தெரிவித்தார்கள். அதனால் நாங்கள் இலங்கை இராணுவம் மற்றும் சுகாதார துறையுடன் இணைந்து சுகாதாரம் இதற்கான திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளோம்.

அதன் பிரகாரம் அனைத்து பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடி இந்த தொழில் கோட்டாவை பெற்றுக்கொள்ள வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்க தீர்மானித்துள்ளோம். அதன் பிரகாரம் எமது வேலைத்திட்டத்தை செயற்படுத்த இந்த தொழில் விண்ணப்பதாரிகளை அழைத்து அவர்களை அறிவுறுத்தும் பல சுற்று கலந்துரையாடல்களை நடத்தினோம்.

தொழில் வாய்ப்புக்களை மீள பெற்றுக்கொள்ளவதாக இருந்தால் இவ்வாறான வேலைத்திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் இந்த தொழில் வாய்ப்பு இல்லாமல் போகும் என்றார்.

## வாகன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி - தற்போதைய விலையை விட எத்தனை சதவீதமாக விலை அதிகரிக்கும்?

வரி விகிதம் 400 சதவீதம் அல்லது 500 சதவீதமாக அதிகரிக்கலாம். சில வாகனங்களுக்கு, இந்த உயர்வு 600 சதவீதம் வரை இருக்க வாய்ப்புள்ளது.

கேள்வி - தற்போது சந்தையில் உள்ள வாகனங்களும் இதே முறையில் அதிகரிக்குமா?

தற்போதைய வாகன சந்தையைவிட விலை சற்று அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

கேள்வி-வாகனங்கள் வாங்கும் விடயத்தில் மக்களுக்கு நம்பிக்கை கொள்ள முடியாதா?

மக்கள் குழப்பமடைய தேவையில்லை. முதலில் வாகனங்கள் நாட்டுக்கு வரும் வரை காத்திருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து, நாட்டின் பொருளாதாரம் கடுமையான சரிவில் இருந்தபோது, மோட்டார் வாகனங்கள் உட்பட அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை தற்காலிகமாக நிறுத்தி, கட்டுப்பாடுகளை விதிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான கடன்திட்டம் செயல்படுத்தப்பட்டதாலும், நாட்டின் வெளிநாட்டு இருப்புக்கள் மேம்பட்டதாலும், பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது. மேலும் இலங்கை மத்திய வங்கியின் ஒப்பந்தத்துடன், வாகன இறக்குமதி தொடர்பாக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அதன்படி, 2024 செப்டம்பர் 12 நடைபெற்ற அமைச்சரவையின் அனுமதிக்க அமைவாக, மூன்றுகட்டங்களின் கீழ் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த வருடம் பெப்ரவரி முதல் அமலுக்கு வருகிறது.

இந்த நிலையில், மோட்டார் வாகன இறக்குமதிக்கான புதிய வரி திருத்தங்களை உள்ளடக்கிய ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு அமலுக்கு வந்துள்ளது.

இதன் விளைவாக, எரிபொருள் மூலம் இயங்கும் மற்றும் மின்சார வாகனங்களின் இறக்குமதிக்கு விதிக்கப்படும் கலால் வரி, வாகனத்தின் சிலிண்டர் திறன் மற்றும் ஆயுட்காலம் ஆகியவற்றின் அடிப்படையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய திருத்தத்தின் மூலம், வகெனார் காரின் வரி சுமார் ரூ.1.6 மில்லியனாக இருந்தது, ஆனால் அது தற்போது 1.8 மில்லியனைத் தாண்டக்கூடும் சுமார் 2 மில்லியன் ரூபாயாக இருந்த விட்ஸ் காரின் இறக்குமதி வரி, சுமார் 2.4 மில்லியன் ரூபாயாக அதிகரிக்கக்கூடும்.

## கரும்புகை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி வழங்கப்படும்.

அவ்வாறில்லாத வாகனங்களை கறுப்புப் பட்டியலில் இணைக்க ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளதாக குறித்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.




காலைக்கதிர் Kalaikkathir

# 2 மாதங்களாகியும் வவுனியாவில் தேர்தல் கொடுப்பனவு இல்லை

வவுனியா மாவட்டத்தில் தேர்தல் கடமையில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் 14ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றது. இதன்போது தேர்தல் கடமைகளில் பல அரச உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் கடமைக்கான கொடுப்பனவுகள் பல மாவட்டங்களிலும் வழங்கப்பட்டுள்ளபோதும் வன்னித் தேர்தல் தொகுதியில் வழங்கப்படவில்லை என கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வன்னித் தேர்தல் தொகுதியில் தேர்தல் நடவடிக்கைக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதியில் முறைக்கேடு இடம்பெற்றுள்ளதாகவும், இதன் காரணமாக வவுனியா மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தற்காலிகமாக பணி இடைநிறுத்தப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் இதன் காரணமாக தேர்தல் கடமையில் ஈடுபட்டவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலகத்தில் இருந்து அறிய முடிகிறது.

# வவுனியாவில் அறுவடைசெய்யப்படும் உளுந்துக்கு உரிய விலை கிட்டவில்லை

## பிரதி விவசாயப் பணிப்பாளர்

வவுனியா மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் உளுந்துக்கு உரிய விலை கிடைக்கவில்லை என பிரதி விவசாயப் பணிப்பாளர் மாலினி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

உளுந்து அறுவடை தொடர்பில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2024 - 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெரும்போகத்தில் 5,650 ஹெக்டேயர் அளவில் வவுனியா மாவட்டத்தில் உளுந்து செய்கையிடப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் விவசாயிகள் தற்போது உளுந்து அறுவடையை மேற்கொள்கிறார்கள். அவர்களுக்கு தற்போது உரிய விலை கிடைக்கவில்லை என்பது குறையாகவுள்ளது.

உண்மையில் அறுவடைக் காலத்தில் விற்பனைக்கு கொண்டு செல்லும்போது விலை குறைவாகத்தான் இருக்கும். உளுந்தை பத்திரமாக வண்டு மற்றும் பூச்சி தாக்கம் இல்லாது பாதுகாக்க வேண்டும்.

விலை அதிகரிக்கும் காலங்களில் அதனை விற்பனை செய்ய வேண்டும். காற்று புகாவண்ணம் 300 கேச் தடிப்புள்ள பொலித்தீனில் பொதி செய்துவைத்திருக்க முடியும். அல்லது 5 லீற்றர் குடிநீர் வரும் போத்தலில் கூட உளுந்தைப் போட்டு பாதுகாப்பாக மூடிவைக்க முடியும். ஆளும் தரப்பு உளுந்துக்கான விலை தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# தைப்பொங்கலை முன்னிட்டு திருமலையில் சுற்றிவளைப்பு

## அரிசியை அதிக விலைக்கு விற்ற இரு கடைகள் சிக்கின

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு விசேட சுற்றிவளைப்பொன்றை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) திருகோணமலையில் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது திருகோணமலை நகரில் அரிசி விலையை அதிகரித்து விற்பனை செய்த இரு கடைகளின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒரு கடையில் சிவப்பு அரிசி 280 ரூபாவுக்கும் இன்னொரு கடையில் வெள்ளை பச்சை அரிசி 270 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதை உறுதிப்படுத்திய பின்னர், இரு கடைகளுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் திருகோணமலை மாவட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடை உரிமையாளர்கள் ஆகக் குறைந்தது ஒரு லட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்த நேரிடலாம் என நுகர்வோர் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# மாணவியை கடத்திச் சென்ற கறுப்பு வான் கண்டுபிடிப்பு

## சந்தேகநபர்களை கைதுசெய்வதில் பொலிஸார் தீவிரம்

கண்டி மாவட்டத்தின் கெலிஓயா, தவுலகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பரப்பொல பகுதியில் சனிக்கிழமை பாடசாலை மாணவியொருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

பாடசாலை மாணவி ஒருவரை வலுக்கட்டாயமாக வானில் கடத்திச் செல்லும் காட்சிகள் அடங்கிய சிசிடிவி காணொளிகள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இரண்டு இளம் முஸ்லிம் பாடசாலை மாணவிகள் பிரதான வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, ஒரு சிறிய கறுப்பு வானில் வந்த குழுவினர், மாணவி ஒருவரை வலுக்கட்டாயமாக கடத்திச் சென்றுள்ளனர்.

இதில் பயந்துபோன மற்றொரு மாணவி அங்கிருந்து ஓடியுள்ளார். அவரை காப்பாற்றுவதற்கு நபரொருவர் முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை.

இதனையடுத்து, கடத்தலுடன் தொடர்புடைய வான் பொலன்னறுவை நகரில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த வாகனம் வாடகைக்கு பெற்றுக் கொள்ளப் பட்டதாகவும் கூறப்படுகிறது.

கடத்தப்பட்ட சிறுமி மற்றும் கடத்திய நபர் குறித்து எந்த தகவலும் வெளியாகவில்லை.

எவ்வாறாயினும், கடத்தலில் ஈடுபட்ட நபர் கடத்தப்பட்ட மாணவியின் உறவினர் என்பது தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மாணவியின் உறவினர்களால் தவுலகல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடத்திச் சென்றவர்களை கைது செய்வதற்குரிய விசாரணை வேட்டையில் பொலிஸார் இறங்கியுள்ளனர்.





காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உதவிகள் உரியவரைச் சென்றடையட்டும்

அஸ்வெசும அரச உதவி பெறுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆளும்தரப்பு முடிவு செய்துள்ளது. பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு வருவதாகவும் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கிப் பயணிப்பதாகவும் ஆளும்தரப்புத் தெரிவித்தாலும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அது புரிந்துகொண்டிருப்பதன் வெளிப்பாடாக இதனை ஏற்றுக்கொள்ளலாம். அரச செலவுகளை மேலும் அதிகரிக்கவல்ல இந்த முடிவுவை எடுத்தமைக்காக ஆளும் தரப்புப் பாராட்டப்படவேண்டியதுதான்.

கொவிட் – 19 நுண்தீமியின் (வைரஸ்) பெருந்தொற்றின் பின்னரான கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வீழ்ந்தோர் எண்ணிக்கை மிக அதிகமாகியிருக்கின்றது. இன்றும் பல குடும்பங்கள் ஒரு நேர அல்லது இரு நேர உணவை மட்டுமே எடுத்துக்கொள்வதற்கே சிரமபப்படும் நிலையில் இருக்கின்றன என்பது யதார்த்தம். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் பாதிக்கப்பட்டுள்ள இத்தகைய மக்களை கைவிட்டுவிடக்கூடாது என்பதில் பன்னாட்டு நாணய நிதியமும் உலக வங்கியும்கூட கரிசனையோடும் அவதானத்தோடுமே இருந்துள்ளன. எனவே சமூகப் பாதுகாப்பைக் குறிக்கோளாகக் கொண்டு அஸ்வெசும தொடர்பில் ஆளும்தரப்பு எடுத்துள்ள கொள்கை முடிவு பாராட்டப்படவேண்டியதுதான்.

அஸ்வேசுமா பயனாளிகளின் குழந்தைகளுக்காக வழங்கப்படும் பள்ளி எழுதுபொருள் கொடுப்பனவை, 300க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 6,576 பள்ளிகளில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும், மேற்கூறிய நலத்திட்டத்தின் பயனாளிகள் அல்லாத குடும்பங்களைச் சேர்ந்த, குழந்தை மேம்பாட்டு மையங்களில் வசிக்கும் குழந்தைகளுக்கும், தீவு முழுவதும் உள்ள அனைத்து 'பிரிவேனாக்களிலும்' உள்ள சாதாரண மற்றும் துறவி மாணவர்களுக்கும் வழங்கவும் ஆளும்தரப்பு முடிவு செய்துள்ளது. இதுவும் அரச செலவுகளை உயர்த்தும் விடயமாக இருந்தாலும், கடந்த மூன்று ஆண்டுகளில் பாடசாலையைவிட்டு வெளியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் மாணவர்களுக்கு இது பேருதவியாக இருக்கும்.

எதிர்காலத்தில் கல்வியறிவு இல்லாத அல்லது திறமையான பணியாளர்களை இலங்கை கொண்டிருப்பதற்கான வாய்ப்புக்களை இது குறைக்கின்றது. குழந்தைகளைப் பாடசாலைக்கு தொடர்ந்து வரவழைத்து, அவர்களுக்கு அர்த்தமுள்ள கல்வியை வழங்குவதை ஆதரிப்பதற்கான இத்தகைய முயற்சிகளும் பாராட்டப்பட வேண்டும். உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் பல வீடுகளின் வாங்கும் திறன் கணிசமாகக் குறைதல் காரணமாக பல குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுகளை எதிர்கொள்வதாகக் கூறப்படுவதும் இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

இவையெல்லாம் ஆளும்தரப்பின் நல்ல நோக்கங்களை வெளிப்படுத்தினாலும் இந்த அரச உதவிகள் சரியான நபர்களைச் சென்றடைகின்றனவா என்கிற கேள்வி மிக முக்கியமானது. இது தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன், கிளிநொச்சி மாவட்டத்தில் வசதி படைத்த பலருக்கே இந்த உதவிகள் கிடைக்கப்பெறுகின்றன என்று பேசியிருந்தார். இந்த அரச உதவியைப் பெறுவதற்கு பல்வேறு தரநிர்ணயங்கள் முன்வைக்கப்பட்டிருந்தபோதும் தகுதியற்றவர்களுக்கு உதவிகள் சென்றடைவதன் பின்னால் அதிகாரிகளின் ஊழல், மோசடிகளும் இணைந்திருக்கின்றன என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும். பயனாளிகளால் வழங்கப்படும் தவறான தகவல்களை ஊழல் அதிகாரிகள் உறுதிப்படுத்துவதன் ஊடாகவே இந்த மோசடி இடம்பெறுகின்றது.

தற்போதைய பயனாளிகள் தேர்வு செயல்முறையில் உள்ள சிக்கல்கள் குறித்து கேள்விகளுக்கு கடந்த வாரம் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, தற்போதுள்ள பயனாளிகளின் நிலையை மதிப்பாய்வு செய்ய கிராம அலுவலர்கள் உட்பட அடிமட்டக் குழுக்களை ஆளும்தரப்பு நியமித்துள்ளதாக விளக்கினார். 'இந்த செயல்முறை நடந்து கொண்டிருக்கும் அதே வேளையில், புதிய விண்ணப்பதாரர்கள் இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம். செயல்முறை இறுதி செய்யப்படும் வரை, தற்போதைய பயனாளிகளின் குழந்தைகளுக்கு இந்த நன்மையை தொடர்ந்து வழங்கப்படவேண்டும். இருப்பினும், இது போதுமானதாக இல்லை என்பதை ஆளும்தரப்பு உணர்ந்துள்ளது, இதனால் 300 க்கும் குறைவான மாணவர்கள் உள்ள பள்ளியில் படிக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த நன்மையை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டது,' என்று அவர் மேலும் கூறினார்.

கடுமையான அளவுகோல்களின் கீழ் இந்த சலுகைகளை வழங்குவதில் உள்ள சவால்களை அமைச்சர் ஒப்புக்கொண்டார், இருந்தாலும் குழந்தைகளின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கிறது என்பதை வலியுறுத்தினார்.

இலங்கை ஒரு வலுவான பொருளாதார மீட்சியை நோக்கிச் செல்லும்போது, எந்தவொரு பாதிக்கப்படக்கூடிய இலங்கையர்களையும் நாம் பின்தங்க வைக்காமல் இருப்பதை உறுதிசெய்ய, சமூகப் பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகியவை மீது சிறப்பு கவனம் செலுத்த வேண்டியது முக்கியம். அதை ஆளும்தரப்பு செய்வது வரவேற்கப்படவேண்டிய அதேநேரம், இந்த சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் பயன்கள் உரியவர்களைச் சென்றடைவதை ஆளும்தரப்பு உறுதிப்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தவேண்டியிருக்கின்றது.

இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்கு என்ற பெயரில் இவ்வாறான அரச உதவிகள் கடந்த பல தசாப்தங்களாகவே வழங்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும் வறுமையை ஒழிக்க முடிந்ததில்லை. அதற்கான காரணங்களில் ஒன்று அதிகாரிகளின் ஊழல் காரணமாக உதவிகள் உரியவர்களைச் முறையாகச் சென்றடையாமல் இருப்பதும்தான். எனவே ஆளும்தரப்பு இது விடயத்தில் தீவிரமாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பது அவசியம்.

அஸ்வசுமா போன்ற அரசு நிதியளிக்கும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்கள் அதன் முந்தைய பதிப்புகளைப் போல வீணடிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய, பொருத்தமான விதிமுறைகளை அறிமுகப்படுத்தி அவற்றை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதும் அவசியம். அதில் தவறிழைப்போரை, அதிகாரிகள் உட்பட தண்டிப்பதற்கான சட்டங்களை உருவாக்குவதும் காலத்தேவை.





## சீனாவின் சட்டவிரோத நில அபகரிப்பு: இந்திய லடாக் பகுதிகள் ஆக்கிரமிப்பு

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நெடுங்காலமாக எல்லை பிரச்னை நீடித்து வருகிறது. குறிப்பாக, இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அருணாச்சல பிரதேசம் மீது சீனா தொடர்ந்து உரிமை கோரி வருகிறது.

### சட்டவிரோத ஆக்கிரமிப்பு :

இந்தியாவின் லடாக் யூனியன் பிரதேசத்தின் வடமேற்கில் அக்சாய்சின் (புவவிழிஷ்ளீஜுஷ்ஜ) என்ற நிலப்பகுதி அமைந்துள்ளது. இந்தப் பகுதி யாருக்குச் சொந்தம் என்பதில் நீண்ட காலமாக சர்ச்சை நீடித்து வருகிறது. இந்திய அரசால் உரிமை கோரப்படும் இந்தப் பகுதியைத் தற்போது சீனா ஆக்கிரமித்துள்ளது. மேலும் இதன் வழியாக சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தையும், திபெத்தையும் இணைக்கும் சாலையை சீன அரசு அமைத்துள்ளது.




இந்த நிலையில் இப்பகுதியை சுஷிள'ழிஜ ளீஸிற்ஜமிதீ மற்றும் சுஷிளவழிஜஆளீஸிற்ஜமிதீ என சீன அரசு குறிப்பிட்டு, இரண்டு புதிய மாவட்டங்களாக அறிவித்துள்ளது. இந்த இரண்டு மாவட்டங்களும் சீனாவின் சின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பகுதியில் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனாவின் இந்த அறிவிப்புக்கு இந்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த 2021இல் அருணாச்சல பிரதேசத்தில் சுமார் 101 வீடுகளைக் கொண்ட ஒரு புதிய கிராமத்தை சீனா உருவாக்கியமை சர்ச்சையை ஏற்படுத்தியது. அடுத்து 2023ஆம் ஆண்டு, சீனா புதிய வரைபடம் ஒன்றை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டது. அந்த வரைபடத்தில், ஆக்கிரமிப்பில் வைத்திருக்கும் இந்தியப் பகுதிகளை 'அக்ஷயா சின்' எனக் குறிப்பிட்டிருந்தது.

### இந்திய இறையாண்மை மீறல்:

இந்தியப் பிரதேசத்தில் சீனா சட்டவிரோதமாக ஆக்கிரமித்ததை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. சீனாவின் ஹோடன் மாகாணத்தில் இரண்டு புதிய மாவட்டங்களை நிறுவுவது தொடர்பான அறிவிப்புக்கும் இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டங்கள் என்று அழைக்கப்படும் பகுதிகளின் அதிகார வரம்பு இந்தியாவின் லடாக் யூனியன் பிரதேசத்தில் வருகிறது என அயலுறவுத்துறை தொர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பிரம்மபுத்திரா ஆற்றில் உலகப் பெரிய அணை கட்ட இருப்பதாக சீனா அறிவித்துள்ளது. இது தொடர்பான இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருகிறத. இந்நிய நலனை காக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தெற்கு திபெத்:

அத்துடன் அருணாச்சல பிரதேச மாநிலத்தை, 'தெற்கு திபெத்' எனவும் சீனா குறிப்பிட்டிருந்தது. மேலும் கடந்த ஆண்டில் அருணாச்சல பிரதேசத்தில் உள்ள முப்பது இடங்களுக்கு சீன மொழிப்பெயர்களை சீன அரசு சூட்டியிருந்தது.

இது தவிர இந்திய எல்லைப் பகுதிகளில் சுரங்கங்கள், பாலங்கள் மற்றும் பதுங்கு குழிகளை அதிகளவில் சீனா உருவாக்கி வருகிறது. மேலும், இந்திய எல்லையையொட்டி தனது ஆக்கிரமிப்பில் உள்ள திபெத்தில் பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே பலகோடி ரூபாய் செலவில் உலகின் மிகப்பெரிய அணையை கட்ட சீனா திட்டமிட்டுள்ளது.


இந்த நிலையில், லடாக்கில் ஆக்கிரமித்த பகுதிகளில் எல்லையில் ஹெலிகாப்டர் தளம் அமைப்பதை படம்பிடித்த செயற்கைக்கோள் புகைப்படங்களை இந்திய ராணுவம் உற்றுநோக்கி வருகிறது.

இந்திய பகுதியை சட்டவிரோதமாக சீனா ஆக்கிரமித்ததை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. சீனா அறிவித்துள்ள

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# சீனாவின்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........






இரு புதிய மாவட்டங்கள் இந்தியாவின் யூனியன் பிரதேசமான லடாக்கில் வருகின்றன என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

புதிய மாவட்டங்களை உருவாக்குவதன் மூலம் குறிப்பிட்ட பகுதியின் மீதான இந்தியாவின் இறையாண்மை தொடர்பான நீண்டகால நிலைப்பாட்டை மாற்ற முடியாது. இந்தச் செயல் சீனாவின் சட்டவிரோத மற்றும் வலுக்கட்டாய ஆக்கிரமிப்புக்கு சட்டப்பூர்வ அங்கீகாரத்தை வழுங்காது. நாங்கள் தூதரக வழிகள் மூலம் சீன தரப்பிற்கு கண்டனத்தை தெரிவித்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

**பிரம்மபுத்திரா நதியில் சீன அணை:**

பிரம்மபுத்திரா நதியில் பாரிய அணை கட்டும் சீனாவின் திட்டம் வட கிழக்கு பிராந்தியத்தில் இந்திய நலன்களை சீர்குலைத்து அழிவை ஏற்படுத்தும். இது மிக மோசமான எதிர்வினையை வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்தும் என்று இந்திய அரசு எச்சரித்துள்ளது. சீனாவின் இத்தகைய சட்டவிரோத ஆக்கிரமிப்பை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்றும் தெரிவித்துள்ளது.

உலகின் மிக நீளமான நதிகளில் பிரம்மபுத்திரா 15வது இடத்திலும் அதிக தண்ணீர் பாயும் நதிகளின் பட்டியலில் 9வது இடத்திலும் இருக்கிறது. இந்த நதியின் மொத்த நீளம் 2,880 கி.மீ. ஆகும். சீனாவின் திபெத் பகுதியில் 1,625 கி.மீ., இந்தியாவில் 918, வங்கதேசத்தில் 337 கி.மீ. தொலைவு பிரம்மபுத்திரா பாய்கிறது. சீனாவின் திபெத் பகுதியில் பிரம்மபுத்திரா நதியின் பெயர் யார்லங் சாங்போ என்று அழைக்கப்படுகிறது.

இந்த நதியில் புதிய அணையை கட்ட சீன அரசு மிக நீண்ட காலமாக திட்டமிட்டு இருந்தது. தற்போது யார்லங் சாங்போ நதியில் ரூ.12 லட்சம் கோடி செலவில் உலகின் மிகப் பெரிய அணையை கட்ட சீன அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்து உள்ளது. இந்த அணையில் 60,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

பிரம்மபுத்திரா நதியில் சீன அரசு மிகப் பெரிய அணையை கட்டுவது இந்தியாவுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக கருதப்படுகிறது. திபெத்தில் உற்பத்தியாகும் மேக்கொங் ஆற்றில் சீன அரசு ஏற்கெனவே பல அணைகளை கட்டி வைத்துள்ளது.

கடந்த 2019-ம் ஆண்டில் இந்த அணைகளில் சீன அரசு அளவுக்கு அதிகமாக தண்ணீரை தேக்கியது. இதனால் மேக்கொங் ஆறு பாயும் தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளின் பகுதிகளில் ஆறு வறண்டது. கடந்த 2019-ம் ஆண்டில் அந்த நாடுகளில் மிகப் பெரிய வறட்சி ஏற்பட்டது.

பிரம்மபுத்திரா நதியின் மூலம் இந்தியாவின் அருணாச்சலபிரதேசம், அசாம், மேகாலயா, நாகாலாந்து, மேற்குவங்கம், சிக்கிம் ஆகிய மாநிலங்கள் வளம் அடைந்து வருகின்றன. சீனா கட்டும் புதிய அணையால் இந்திய மாநிலங்களில் வறட்சி பாதிப்பு ஏற்படக்கூடும். இமயமலை பகுதிகளில் அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. சீனா அணை கட்டும் இடத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டு அணையில் உடைப்பு ஏற்பட்டால் மிகப் பெரிய பேரழிவு ஏற்படும்.

0இந்திய, சீன ராணுவ வீரர்களிடையே பதற்றம் ஏற்படும்போது அணையில் இருந்து அதிக தண்ணீரை திறந்துவிட்டு இந்திய பகுதிகளில் வெள்ள பாதிப்பை ஏற்படுத்தும் அபாயமும் இருக்கிறது.

ஏற்கெனவே கங்கை நதியின் நீர்வரத்தை கட்டுப்படுத்தும் வகையில் திபெத்தின் மப்ஜா சாங்போ நதியில் புதிய அணையை சீன அரசு கட்டி வருகிறது. இந்த அணை உத்தராகண்ட் மாநில எல்லைக்கு மிக அருகில் அமைந்துள்ளது. இந்தியாவின் இரு பிரதான அணைகளின் நீர்வரத்தை கட்டுப்படுத்தும் வகையில் சீனா செயல்பட்டு வருகிறது. இதுகுறித்து இந்தியா மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்று சர்வதேச நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# மயோன் சமூக சேவை அமைப்பில் பல புதிய உறுப்பினர்கள் இணைவு

(பாறுக் ஷிஹான்)

மயோன் சமூக சேவை அமைப்பின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கல்முனை மயோன் பிளாஸா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. மயோன் சமூக சேவை அமைப்பின் தலைவரும் மயோன் குரூப் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளருமான எம்.றிஸ்லி முஸ்தபா தலைமையில் இடம்பெற்ற இப்பொது கூட்டத்தின் புதிய நிர்வாகக் கட்டமைப்பும் தலைவரால் அறிவிக்கப்பட்டது.

அஷ் ஷெய்க் மௌலவி தாசிம் உம்றி கிராத்துடன் ஆரம்பமான இவ் நிகழ்வில் வரவேற்புரை தென் கிழக்கு பல்கலைக்கழக தொழிநுட்ப உத்தியோகத்தரும் அமைப்பின் ஆலோசகருமான றம்ஸானால் நிழத்தப்பட்டது. நன்றியுரை அமைப்பின் ஆலோசகர் மாஹிர் ஆசிரியர் நிகழ்த்தினார். நிகழ்வின் முக்கிய அம்சமான சத்தியப்பிரமாணம் பிரதி செயலாளர் முஹம்மது பஸ்மிர் மேற்கொண்டதுடன் முஹம்மட் றொஸான் நிகழ்வை சிறப்பாக நெறிப்படுத்தி இருந்தார்.

மேலும் இந்நிகழ்வில் 2025 ஆம் ஆண்டுக்கான செயலாளராக சுகைல் ஜமால்தீன் தெரிவு செய்யப்பட்டார்.பிரதிச் செயலாளராக முஹம்மட் பஷ்மீர் பொருளாளராக முகம்மட் நிஃப்ராஸ் ஆகியோர் சபையின் அங்கீகாரத்துடன் அறிவிக்கப்பட்டனர். புதிய அங்கத்தவர்களாக இணைந்து கொண்டவர்களுக்குநியமனக்கடிதம்மற்றும் அமைப்பின் அடையாள அட்டை ஆகியன வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் எதிர்கால திட்டங்களும் கலந்துரையாடப்பட்டன.

தொடர்ச்சியாக அங்கத்தவர்களை இணைத்துக்கொள்வதற்கான பொறிமுறையும் உருவாக்கப்பட்டதுசுமார் 5 வருட காலமாக அம்பாறை மாவட்டத்தில் லட்சக்கணக்கான ரூபாக்களைக் செலவு செய்து பல சமூக சேவைகளை செய்து வரும் தொண்டு சார் நிறுவனமாக மயோன் சமூக சேவை திகழ்கின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.















ஊடக அனுசரணை:- காலைக்கதிர் Kalaikkathir மாலைக்கதிர் Maalaikkathir தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

# சவூதி - இலங்கை இடையே 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்



சவூதிக்கும் இலங்கைக்கும் இடையில் பல துறைகளை சார்ந்த 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நிர்மாணிக்கப்பட்டு பல ஆண்டுகளாக மக்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் 500 சவூதி வீட்டுத்திட்டத்தை கூடிய விரைவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வைக்குமாறு இலங்கைக்கான சவூதி தூதுவர் காலித் ஹமூத் நாசர் அல்தாசம் அல்கஹ்தானி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான சவூதி தூதுவர் காலித் ஹமூத் நாசர் அல்தாசம் அல்கஹ்தானி வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்தை சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்குறிப்பிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் சவூதி வீட்டுத்திட்டம் குறித்து பேசப்பட்டது.

சுனாமி பேரழிவில் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களுக்கு சவூதி அரசாங்கம் ஆயிரம் வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்து, அதன் முதல் கட்டமாக 500 வீடுகளும் பாடசாலை, பஸ் தரிப்பிடம் மற்றும் விளையாட்டு மைதானம் என பூரண வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்து பல ஆண்டுகளை கடந்துள்ளன. ஆனால், இதுவரையில் அந்த வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவில்லை.

இறுதியில் நீதிமன்றம் குறித்த வீடுகளை இன விகிதாசார அடிப்படையில் வழங்குமாறும் அதன் பிரகாரம் 70 வீதம் முஸ்லிம்களுக்கும் ஏனையவர்களுக்கு 30 வீதமும் வழங்குமாறு தீர்ப்பளித்திருந்தது. எனவே, இந்த வீடுகளை கால தாமதமின்றி மக்களுக்கு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு, துறைசார் நிபுணத்துவம் கொண்ட பணியாளர்களை சவூதிக்கு உள்வாங்குதல் மற்றும் இருதரப்பு தொழில்துறை வளர்ச்சி போன்ற விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதன் அடிப்படையில் சவூதிக்கும் இலங்கைக்கும் இடையில் 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# அம்பாறை – மாவடிப்பள்ளி பிரதான வீதியில் ஒளிராத மின்விளக்குகள்

## அசௌகரியத்தில் மக்கள்

(பாறுக் ஷிஹான்)

காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட அம்பாறை - மாவடிப்பள்ளி பிரதான வீதியில் அமைந்துள்ள மின்விளக்குகள் பல நாள்களாக ஒளிராத காரணத்தால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் அடைமழை பெய்துவரும் நிலையில் அப்பகுதி இருளில் மூழ்கியிருப்பதால் வீதியில் செல்லும் வாகனங்கள் உட்பட பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருவதாகக்கூறப்படுகிறது.

அம்பாறை - காரைதீவு - மாவடிப்பள்ளி பிரதான வீதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 6 மாணவர்கள் உட்பட 8 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

அத்துடன், இப்பகுதியில் காட்டுயானைகளின் அட்டகாசம் காணப்படுவதனால் மாவடிப்பள்ளி பெரிய பாலம் முதல் காரைத்தீவு முச்சந்தி வரையிலுள்ள பிரயாணிகள் அவலங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

ஆனால், பெரிய பாலம் தொடக்கம் மாவடிப்பள்ளி சியாரம் வரையில் பொருத்தப்பட்ட மின்விளக்குகள் இரண்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து ஒளிர்ந்த பின் மீண்டும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு விளக்குகள் ஒளிராமல் போனதால் தொடர்ந்து பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டன.

மழை அதிகரிக்கும்போது வீதி மூழ்கும்படியாக வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுவதால் பாம்பு, முதலை, ஆமை போன்ற உயிரினங்களின் அச்சுறுத்தலும் அப்பகுதியில் ஏற்பட்டுள்ளது.

எனவே அவ்வீதியின் மின்விளக்குகள் தொடர்ந்தும் ஒளிர்வதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடும்

## அதன் தலைவர் சிறிதரன் தெரிவிப்பு

நடைபெற இருக்கின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடும். அதற்கு இளைஞர், யுவதிகளை தயாராகுமாறு அக்கட்சியின் தலைவர் ப.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இன்னும் ஓரிரு மாதங்களில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. தேர்தல்களில் போட்டியிட உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள். தமிழர் வாழும் பகுதிகளில் தேர்தல்களில் போட்டியிட விரும்புபவர்கள் உங்களின் விவரங்களை எமக்கு அனுப்பிவையுங்கள்.

உங்களுக்கு உற்சாகமான செய்தி ஒன்று. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் எனக் கூறிக்கொண்டு கட்சியை குறுக்குவழியில் அபகரிக்க முயன்ற மக்கள் முன்னேற்றக் கட்சியின் தலைவர் அருண் தம்பிமுத்து குழுவினரின் செயற்பாட்டை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழர்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்தும் போராடுவோம் வாருங்கள். - என்றுள்ளது.

# மனைவியின் காதை வெட்டிய கணவருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பகுதியில் மனைவியின் காதை வெட்டிய கணவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் சனிக்கிழமை உத்தரவிட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது கணவனின் சித்திரவதை தாங்காமல் சண்டிலிப்பாயில் உள்ள உறவினரின் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அங்கு சென்ற கணவன் கடந்த 07.10.2024 அன்று மனைவியின் காதை வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய பின்னர், இச்சம்பவம் குறித்து கடந்த 10.10.2024 அன்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

சந்தேக நபருக்கு எதிராக வேறு சில முறைப்பாடுகள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் தப்பிச் சென்ற நபர் கடந்த வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் இதற்கு முன்னரும் மனைவியின் தலை மற்றும் காலினை உடைத்து, பல்வேறு சித்திரவதைகளை செய்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை சனிக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை அவரை அடுத்த 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.







# உணர்வெழுச்சியோடு வெள்ளிக்கிழமை மலையக தியாகிகள் தினம் அனுஷ்டிப்பு

(கிஷாந்தன்)

மலையக மக்களுக்கான உரிமைப் போராட்டங்களில் உயிர்தியாகம் செய்த மலையக தியாகிகளை நினைவுகூரும், மலையக தியாகிகள் தினம் வெள்ளிக்கிழமை கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் உணர்வுப்பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பிடிதளராதே அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். பொதுச்சுடர் ஏற்றப்பட்ட பின்னர், நிகழ்வுகள் இடம்பெற்றன.

மலையக தமிழ்மக்களுக்குரிய தொழில்சார் உரிமைகள், காணி உரிமை, மொழி உரிமை, அரசியல் உரிமை, பொருளாதார உரிமை உள்ளிட்ட விடயங்களுக்கான போராட்டங்களினபோது உயிர் நீத்தவர்களே நினைவுகூரப்படுகின்றனர். பிடிதளராதே அமைப்பு மற்றும் மலையக உரிமைக்குரல் என்பன இணைந்து 2019 டிசெம்பர் மாதம் சர்வதேச தேயிலை தினத்தன்று மலையக தியாகிகள் தினத்தை நடத்தி இருந்தன.

நுவரெலியா மாவட்டம், தலவாக்கலை, டெவோன் தோட்டத்தில் உள்ள மலையக மக்களுக்கான காணி உரிமை போராட்டத்தில் உயிர்தியாகம் செய்த சிவனு லெட்சுமனனின் கல்லறையில் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டது.

இதன்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுப் போராட்டத்தில் உயிர்தியாகம் செய்து, மலையக தியாகிகள் வரலாற்றை ஆரம்பித்து வைத்த முல்லோயா கோவிந்தன் உயிர் துறந்த ஜனவரி 10 ஆம் திகதியை, மலையக தியாகிகள் தினமாக அனுஷ்டிப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படியே ஜனவரி 10 ஆம் திகதி மலையக தியாகிகள் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2020 ஜனவரியில் மஸ்கெலியாவில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. 2021 இல் பத்தனையில் நடைபெற்றது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் கொட்டகலையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே இம்முறை கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

# திருகோணமலை – வீரநகர் கரையோரம் கடலுக்குள் உள்வாங்கப்படும் அபாயம்

திருகோணமலை - வீரநகர் கரையோரப் பகுதியில் உள்ள மக்களின் குடியிருப்புப் பகுதி திடீரென கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக கடலரிப்பின் காரணமாக அப்பகுதி கடலுக்குள் உள்வாங்கப்பட்டு வருவதாகவும் இவ்வாறான காட்சியை தம் வாழ்வில் முதல் முறை காண்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த கடலரிப்பால் கடற்கரையை அண்டி காணப்படும் சில வீடுகளின் மதில்கள், அத்திபாரம், சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.

இக்கடற்பகுதியில் பாரிய இரும்புப் பின்னல் தொகுதியொன்று கரையின் நீளமான பகுதிக்கு வெளிவருவதாகவும் இது என்ன என்பது தொடர்பில் அறிய முடியாதுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடலரிப்பில் இருந்து தம்மை பாதுகாப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





# திருமலை நாய்கள் சரணாலயத்தில் கட்டாக்காலி நாய்கள் ஒப்படைப்பு

திருகோணமலை நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள், பிரதேச சபையால் பராமரிக்கப்படும் நாய்களுக்கான சரணாலயத்தில் சனிக்கிழமை ஒப்படைக்கப்பட்டன.

நகராட்சி மன்றமும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து கால்நடை வைத்தியர்களின் உதவியுடன் இந்நடவடிக்கையை முன்னெடுத்தது.





வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# விக்டோரியா நீர்த்தேக்கத்தின் அருகில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## சந்தேகநபர்கள் கைது

தெல்தெனிய விக்டோரியா நீர்த்தேக்கத்தின் அருகே மறைவான பகுதிகளில் மிகப் பாரியளவில் சட்டவிரோத மது மற்றும் கசிப்பு தயாரிக்கும் இடத்தை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் சனிக்கிழமை முற்றுகையிட்டனர்.

இந்த சுற்றிவளைப்பின்போது தப்பியோட முயற்சித்த சந்தேக நபர்களை அதிகாரிகள் கைது செய்ததுடன் 4 லட்சம் மில்லி லீற்றர் வரையான கோடா, 50 பீப்பாய்கள், சீனி, இரும்புச் சுருள்கள், கசிப்பு வடிகட்டி போன்றவற்றை அதிகாரிகள் கைப்பற்றினர்.





இங்கு தயாரிக்கப்பட்டு வந்த சட்டவிரோத கசிப்பு தெல்தெனிய, திகன, பலகொல்ல, மெனிக்கின்ன, பல்லேகெலே, ரஜவெல, ஹாரகம, வலப்பனை உட்பட பல இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிநியோகம்செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்ததாக மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# புதிய உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் நால்வர் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்பு



நான்கு புதிய உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர்.

அதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான ஆர்.எம்.எஸ். ராஜகருணா, மேனகா விஜேசுந்தர, சம்பத் பி.அபேகோன் மற்றும் எம்.எஸ்.கே.பி. விஜேரத்ன ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் புதிய உச்ச நீதிமன்ற நீதியரசர்களாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.01.2025இல் வெளியிடப்பெற்றது